**பாஷினி செயலி மற்றும் அரசுத் துறைகள் இணையதள அறிமுக நிகழ்ச்சியில் மாண்புமிகு துணைநிலை ஆளுநர் திரு. K. கைலாஷ்நாதன் அவர்களின் உரை**

இடம் – ஓட்டல் அக்கார்டு, புதுச்சேரி தேதி – 08-07-2025

மரியாதைக்கு உரிய முதலமைச்சர், சட்டப்பேரவைத் தலைவர், அமைச்சர் பெருமக்கள், அதிகாரிகள், வல்லுநர்கள், சகோதர-சகோதரிகள் அனைவருக்கும் என்னுடைய வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியாவின் DIGITAL பயணத்தில் இன்று நாம் மற்றொரு முக்கிய கட்டத்தை எட்டி இருக்கிறோம். இன்றைய நிகழ்ச்சி– மத்திய அரசின் “BHASHINI APP“- மொழிபெயர்ப்பு செயலி மற்றும் அரசு துறைகளின் புதிய இணைய தளங்கள் அறிமுகம் – ஒரு நல்ல மாற்றத்தைக் குறிப்பதாக இருக்கிறது. தொலைநோக்குப் பார்வை கொண்ட நம்முடைய மாண்புமிகு பாரதப் பிரதமர் நரேந்திர மோடியின் "DIGITAL INDIA" கனவை பிரதிபலிக்கிறது.

இந்த நிகழ்ச்சியின் ஒரு முக்கிய அம்சம் – BHASHINI APP அறிமுகம். இந்தியாவின் மொழி வளம் உலகின் வேறு எந்த நாட்டிலும் இல்லாத அளவிற்கு தனித்துவமானது. அரசியல் அமைப்பால் அங்கீகரிக்கப்பட்ட 22 மொழிகள் - தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம், இந்தி, குஜராத்தி என்று 22 மொழிகள் இருக்கின்றன. நூற்றுக்கும் மேற்பட்ட பேச்சு மொழிகள் இருக்கின்றன. அப்படி பல மொழிகள் பேசும் மக்களின் நாடாக இந்தியா இருக்கிறது. மொழி நம்முடைய அடையாளமாக, உரிமையாக இருக்கிறது. இது ஒரு பக்கம் பெருமையாக இருந்தாலும்,

கருத்து அல்லது தகவலின் பரிமாற்றத்தில், இது ஒரு தடையாகவே இருக்கிறது என்ற நடைமுறை உண்மையை நாம் ஏற்றுக் கொள்ளத் தான் வேண்டும்.

இதை போக்கும் முயற்சியாக, மத்திய அரசு “BHASHINI” - BHASa INterface for India - என்ற மொழிபெயர்ப்பு APP-ஐ உருவாக்கி இருக்கிறது. மொழி அடிப்படையிலான இடைவெளியை இந்த BASHINI APP குறைக்கிறது. பொதுமக்கள் தங்களுடைய சொந்த மொழியில் அரசின் திட்டங்கள், சேவைகள் பற்றிய தகவல்களை பெற உதவுகிறது.

இந்த BHASHINI APP, செயற்கை நுண்ணறிவு (AI, NLP) போன்ற LATEST TECHNOLOGY அடிப்படையில் MULTI-LINGUAL APP –ஆக உருவாக்கப்பட்டு இருக்கிறது. அரசு ஆவணங்கள், இணைய தள சேவைகளை, இந்தியாவில் இருக்கும் எந்த மொழியில் வேண்டுமானாலும் எளிதாக மாற்றி தருகிறது. புதுச்சேரி மாநிலத்திற்கு இது பெரும் பயனாக இருக்கும். புதுச்சேரி, காரைக்கால், மாகி, ஏனாம் என்று தமிழ், மலையாளம், தெலுங்கு பேசும் பகுதிகளில் இருக்கும் மக்கள் புதுச்சேரி அரசின் அறிவிப்புகளை, திட்டங்களை இனி அவரவர் மொழியிலேயே தெரிந்த கொள்ள முடியும் என்பது மகிழ்ச்சியான ஒன்று.

கடந்த ஏப்ரல் மாதம் ஆளுநர் மாளிகையில் BASHINI APP சம்பந்மாக ஒரு ஆலோசனை கூட்டம் நடத்தினேன். அப்போது புதுச்சேரி மக்கள் பயன் அடையும் விதமாக அதை விரைவாக நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டேன்.

அதை ஏற்று இந்த DIGITAL வளர்ச்சிக்கு துணையாக இருந்து பணியாற்றி INFORMATION TECHNOLOGY DEPARTMENT, NATIONAL INFORMATICS CENTRE அதிகாரிகள் அனைவருக்கும் என்னுடைய பாராட்டுகளும் வாழ்த்துக்களும்.

இன்றைய நிகழ்ச்சியின் மற்றொரு முக்கிய அம்சம், அரசு துறைகளின் புதிய இணைய தளங்களின் அறிமுகம். அரசு நிர்வாகத்தின் வெளிப்படைத் தன்மைக்கும், செயல் திறனுக்கும் ஒரு நல்ல எடுத்துக்காட்டு. ஒரு கிளிக் செய்தால் போதும். அரசின் திட்டங்களை தெரிந்து கொள்ள முடியும். இப்போதெல்லாம் MOBILE PHONE-இல் INTERNET வசதி இருக்கிறது. அதனால் MOBILE, TAB, LAPTOP என்று எங்கிருந்தாலும் அதை தெரிந்து கொள்ளலாம்.

அது மட்டும் அல்ல, இணைய தளம் மூலமாக அரசு துறைகளின் செயல்பாடுகளை வெளிப்படையாக மக்கள் தெரிந்து கொள்ள முடியும். துறை சார்ந்த முக்கிய அறிவிப்புகள், திட்டங்கள், நிதி பயன்பாடு எல்லாம் பொதுமக்கள் கண்காணிக்க முடியும். இது "PARTICIPATIVE GOVERNANCE"-க்கு வழி வகுக்கும்.

இதனால், குடிமக்களுக்கும் அரசு துறைகளுக்கும் இருக்கும் இடைவெளி குறைந்து ஒரு நேரடி தொடர்பு ஏற்படும். இணைய தளம் ஒவ்வொன்றும் மக்கள் எளிதில் பயன்படுத்தக் கூடியதாக CITIZEN-FRIENDLY INTERFACE- ஆக, GRIEVANCE REDRESSAL, RTI REQUEST மூலம் தகவல்களை, சேவைகளை எளிதில் பெறக் கூடியதாக அமைக்கப்பட்டு இருக்கிறது என்று அறிகிறேன்.

இது போன்ற வசதிகளோடு DIGITAL INDIA-வை உருவாக்க வேண்டும் என்பதுதான் மத்திய அரசின் பெரும் கனவு.

பாரதப் பிரதமர் கொண்டு வந்த, "DIGITAL INDIA" திட்டம் இந்தியாவில் ஒரு மிகப் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தி இருக்கிறது. நான் குஜராத்தில் இருந்தபோது இந்த திட்டத்தில் பணியாற்றி இருக்கிறேன். தொடக்கத்தில், 120 கோடி மக்கள் தொகை கொண்ட இந்தியாவில் இந்த திட்டம் வெற்றி பெறுமா என்ற கேள்வி இருந்தது. ஆனால், இன்று சாலை ஓரம் இருக்கும் சிறு வியாபாரிகள் கூட DIGITAL TRANSACTION பயன் படுத்துகிறார்கள். இது மிகப் பெரிய வளர்ச்சி. **வளர்ச்சி இல்லை – புரட்சி**.

"POWER TO EMPOWER". அதாவது, மக்களின் முன்னேற்றத்திற்கான சக்தியாக DIGITAL TECHNOLOGY-ஐ பயன்படுத்துவதுதான் இந்த திட்டத்தின் முதன்மையான நோக்கம். இந்த திட்டத்தின்கீழ், DIGILOCKER, UMANG, MY GOV, AADHAAR, e-GOVERNANCE, GeM PORTAL போன்ற சேவை செயலிகள் உருவாக்கப்பட்டு இருக்கிறது. அரசின் திட்டங்கள், சேவைகள் நேரடியாக பயனாளிகளை அடைகின்றன. DBT என்ற DIRECT BENEFIT TRANSFER முறை மூலமாக இடைத் தரகர்கள் இல்லாமல் பல கோடி மக்களுக்கு நேரடியாக நிதியுதவி சென்று சேர்கிறது.

BHARAT NET, 5G விரிவாக்க திட்டங்கள், கிராமப் புறங்களுக்கும் இணையதள சேவையை கொண்டு வந்து, ஒரு DIGITAL சமுதாயத்தை உருவாக்கி இருக்கிறது. அந்த வரிசையில் BASHINI செயலியும், புதிய இணைய தளங்களின் தொடக்கமும் சேர்ந்து இருக்கின்றன.

நிகச்சியில் கலந்து கொண்டு இருக்கும் அனைவருக்கும் நான் சொல்வது இதுதான். நாம் ஒவ்வொருவரும் பொறுப்புடன் செயலாற்ற வேண்டிய நேரம் இது. இந்தியாவின் DIGITAL பயணம் என்பது வெறும் TECHNOLOGY வளர்ச்சி அல்ல – அது ஒரு சமுதாய மாற்றம். அரசு நிர்வாகத்தில் வெளிப்படை தன்மையை ஏற்படுத்தி குடிமக்கள் அனைவரும் நிர்வாகத்தில் பங்கு பெறச் செய்யும் ஒரு முயற்சி.

அன்மையில் ஆளுநர் மாளிகையில் BASHINI APP சம்பந்மாக ஒரு ஆலோசனை கூட்டம் நடத்தினேன். அப்போது புதுச்சேரி மக்கள் பயன் அடையும் வகையில் அதை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டேன். அதை ஏற்று இந்த DIGITAL வளர்ச்சிக்கு துணையாக இருந்து பணியாற்றி INFORMATION TECHNOLOGY DEPARTMENT, NATIONAL INFORMATICS CENTRE அதிகாரிகள் அனைவருக்கும் என்னுடைய பாராட்டுகளும் வாழ்த்துக்களும். மாணவர்களும் இளைஞர்களும் இந்த DIGITAL INTRASTRUCTURE-ஐ சரியான முறையில் பயன்படுத்தி, விழிப்புணர்வோடு ஜனநாயக-சமுதாய முன்னேற்றத்திற்கு பங்காற்றுங்கள் என்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன்.

**நன்றி.. வணக்கம்...**